# சென்னையில் தி.மு.க. 75 அறிவுத் திருவிழா – காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு நூல் வெளியீடு:

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை... 5–ம் பக்கத் தொடர்ச்சி

அதே மாதிரி, இங்கேயும் சிறுபான்மை மக்களுடைய வாக்குகளை, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாக்குகளை குறி வைத்து எப்படியாவது நீக்கிவிட வேண்டும் என்று முயற்சி செய்கிறார்கள். SIR முடிகிறவரைக்கும் அந்த வேலையில நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அப்போதுதான் பா.ஜ.க-வின் சதித் திட்டத்தை நம்மால் முறியடிக்க முடியும்.

பிரதமர் நரேந்திர மோடி ஒவ்வொரு மாநிலமாகச் சென்று தி.மு.க மேல் வன்மத்தை பரப்பிக்கொண்டு இருக்கிறார். ஒவ்வொரு மாநிலத்துக்கு இடையேயும் பகையை மூட்டிக்கொண்டு இருக்கிறார்.

தமிழ்நாட்டில் பீகார் மக்களை, நாம் துன்புறுத்துகிறோம் என்று பேசியிருக்கிறார். தமிழ்நாட்டில் உள்ள ஒரேயொரு பீகார் காரார் துன்புறுத்தப்பட்டுள்ளார் என்றால், அது இங்குள்ள ஆளுநர் ரவி அவர்கள் மட்டும்தான். அவரையும் நாம் துன்புறுத்தவில்லை. அவர் தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களை துன்புறுத்துவதால், அவரை தமிழ்நாட்டு மக்கள் துன்புறுத்துகிறார்கள். நம் தலைவர் அவர்கள் தயவுசெய்து இங்கு இருக்கின்ற ஆளுநரை மாற்றாதீர்கள் என்ற வேண்டுகோளை வைக்கும் அளவு பெரிய மனதுக்காரர்தான் நம் தலைவர் அவர்கள்.



### எடுத்துக்காட்டான முதலமைச்சர்

பா.ஜ.க.வின் பிரித்தாளும் சூழ்ச்சியை நாம் முறியடிக்க வேண்டும். விரைவில், பாசிச பா.ஜ.க.வுக்கு எதிராக ஒட்டுமொத்த நாட்டு இந்திய மக்களும் திரளப் போகிறார்கள். அதற்கான விழிப்பு உணர்வை ஒட்டுமொத்த நாட்டுக்கும் கொடுக்கும் தத்துவம் நம்முடைய திராவிட மாடல் தத்துவம். இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் நம் அரசு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அதனால்தான், 'திராவிடம்' என்கிற பெயரைக் கேட்டாலே பாசிச சக்திகள் இன்று பதறுகிறார்கள்.

எல்லா மாநிலத்திலும் அரசியல் களம் பா.ஜ.க.வுக்கு எதிராக மாறுகிறது. நாட்டில் உள்ள எல்லா முதலமைச்சருக்கும் ஒரு எடுத்துக்காட்டான முதலமைச்சராக நம் தலைவர் அவர்கள் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார்.

சமீபத்தில் நீங்கள் தொலைகாட்சியில் பார்த்திருப்பீர்கள். பீகார் மாநிலத்தின் முதலமைச்சர் வேட்பாளர் தேஜேஸ்வி யாதவ் அவர்களிடம் அகில இந்திய தொலைகாட்சி நிறுவனம் பேட்டி எடுக்கிறார்கள். அவர்கள் இந்தியாவின் சிறந்த முதலமைச்சராக நீங்கள் யாரை நினைக்கிறீர்கள் என்று கேட்கும்போது, அவர் ஒரு நிமிடம் கூட யோசிக்கமால் பதில் சொல்கிறார் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்று நம் தலைவரின் பெயரை சொல்கிறார்.

11.19 சதவிகித பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவிலேயே முதலிடத்தில் நம் மாநிலம் சிறந்து விளங்குகிறது என்றால், அதற்கு காரணம் நம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள திட்டங்கள்தான். இந்த நான்கரை வருட திட்டங்களை மக்களிடம் தொடர்ந்து பேசுங்கள். திண்ணைப் பிரச்சாரங்கள், தெரு முனைக் கூட்டங்கள் நடத்துங்கள்.

இன்று ஒன்றிய அரசு ஒரு திட்டத்தை அறிவிக்கிறது என்றால், தமிழ்நாடு முதலமைச்சர் என்ன முடிவெடுகிறார், தமிழ்நாட்டு மக்கள் என்ன மனநிலையில் இருக்கிறார்கள் என்று மற்ற மாநில முதலமைச்சர்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள். தொடர்ந்து மற்ற மாநில முதலமைச்சர்கள் இங்கு வந்து நம் திட்டங்களை பாராட்டிவிட்டு செல்கிறார்கள்.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் விரிவுப்படுத்தும்போது, பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் சிங் அவர்கள் பாராட்டிவிட்டுச் சென்றார். கல்வியில் சிறந்த தமிழ்நாடு நிகழ்ச்சிக்கு வந்த தெலங்கானா முதலமைச்சர் பாராட்டிவிட்டுச் சென்றார். இப்படி இந்தியாவில் உள்ள அனைத்து தலைவர்களும் திரும்பிப் பார்க்கக்கூடிய தலைவராக நம் தலைவர் அவர்கள் உருவாகி இருக்கிறார்.

அதற்கான தொடக்கமாக, இந்த அறிவுத்திருவிழா நிச்சயம் இருக்கும். இன்னும் ஒரு வார காலம் இங்கே முற்போக்கு புத்தக காட்சி நடக்க இருக்கிறது., எல்லோரும் அதை பயன்படுத்திக் கொள்ளவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தி திணிப்புக்கு எதிராக நாம் பேசினால், வட மாநிலங்களில் இருந்து நமக்கு ஆதரவு வருகிறது. புதியக் கல்விக்கொள்கை வேண்டாம் என்று நாம் முதலில் சொன்னோம். இப்போது மற்ற மாநில முதலமைச்சர்களும் எங்களுக்கும் வேண்டாம் என்று குரல் கொடுக்கிறார்கள். மாநில உரிமைக்காக நாம் பேசினால், பிற மாநில முதலமைச்சர்களும் நம்முடன் சேர்ந்து குரல் கொடுக்கிறார்கள். நிதி உரிமை வேண்டும் என்று நாம்தான் முதன்முதலில் குரல் கொடுத்தோம். இன்றைக்கு மற்ற மாநில முதலமைச்சர்கள் நம் முதலமைச்சரைப் பின்பற்ற ஆரம்பித்துள்ளார்கள்.

ஆகவே, இந்த சூழலில், தமிழ்நாட்டில் அடிமைகளை கையில் வைத்துக் கொண்டு பாசிச பா.ஜ.க. போடும் திட்டங்களை எல்லாம் கழக உடன்பிறப்புகள், இளைஞர் அணி தம்பிமார்கள் நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து முறியடித்து களத்தில் வேலை பார்த்து, நம் கழகத்தை வெற்றிபெற வைக்க வேண்டும்.

அதற்கான தொடக்கமாக, இந்த அறிவுத்திருவிழா நிச்சயம் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இன்னும் ஒரு வார காலம் இங்கே முற்போக்கு புத்தக காட்சி நடக்க இருக்கிறது, எல்லோரும் அதை பயன்படுத்திக் கொள்ளுங்கள். இந்தியாவின் ஜனநாயகத்தையும் - தமிழ்நாட்டையும் காக்க, 2026 சட்டமன்றத் தேர்தலில், தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி மாபெரும் வெற்றியை அடைந்தே ஆக வேண்டும்.

வருகிற 2026 தேர்தலில் கழகத்தை ஏழாவது முறையாக ஆட்சியில் அமர்த்த வேண்டும். நம் கழகத் தலைவர் அவர்களை, தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக்க வேண்டும். அதற்கு நிச்சயமாக இளைஞர் அணியின் பங்கை நாம் கொடுத்தாக வேண்டும். அடுத்த 5 மாதங்களுக்கு நாம் அனைவரும் தொடர்ந்து பாடுபட வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நிகழ்ச்சியை நடத்துவது சாதாரண விஷயம் கிடையாது. மிகுந்த சிரமம். சென்ற 10 நாட்களுக்கு முன்பு நடைபெற வேண்டிய நிகழ்ச்சி. சென்னையில் பெய்த கனமழையால் தள்ளி வைத்தோம்.

நான் நான்கு முறை இங்கு வந்து என்னென்ன வேலைகள் நடந்துகொண்டு இருக்கின்றன என்று வந்து பார்வையிட்டேன். என்னைவிட அதிகமாக இந்த நிகழ்ச்சி வெற்றிகரமாக அமைய வேண்டும் என்று உழைத்த நம் மாநில துணைச் செயலாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக சகோதரர் ஜோயல் அவர்களுக்கு வாழ்த்துகள், பாராட்டுகள், நன்றிகள்.

இந்த அறிவு திருவிழாவை மிகச்சிறப்பாக ஒருங்கிணைத்த, இளைஞர் அணி துணைச் செயலாளர்கள், நூல் உருவாக்கக் குழுவினர் கழக நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நேற்று நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நம் கூட்டணிக் கட்சி தலைவர்கள், பதிப்பகத்தார் - எழுத்தாளர்கள் - கலைக்குழுவினர், இளம் பேச்சாளர்கள் - பத்திரிகையாளர்கள், இளைஞர் அணி உள்ளிட்ட நம் கழகத்தை சேர்ந்த அனைத்து அணிகளைச் சேர்ந்த அருமை சகோதரர்கள், சகோதரிகள் அத்தனைப் பேருக்கும், ஆய்வாளர்களுக்கும், அன்பகம் செந்தில் அவர்களுக்கும், அன்பகத்தில் இருந்து இந்தப்பணிகளை எல்லாம் ஒருங்கிணைக்கும் பணியாளர்கள் அனைவருக்கும், மீண்டும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியும் தெரிவித்து இந்த அறிவுத் திருவிழா நிச்சயம் வெல்லும், அதை 2026 சட்டமன்றத் தேர்தல் வெற்றி நிச்சயம் நமக்கு சொல்லும் என்று சொல்லி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் கோவி.செழியன், ஜெயரஞ்சன், செந்தலை கௌதமன், திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன், சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன், ஆர்.டி.சேகர், எபினேசர், பிரபாகர்ராஜா, சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் எழிலன், இல.பரந்தாமன், கே.பி.சங்கர், பிரபாகரன், தந்தை பெரியார் திராவிடர் கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் சீனி விடுதலை அரசு, எழுத்தாளர் இமையம், சென்னை இதழியல் நிறுவனத் தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன், திராவிட இயக்க எழுத்தாளர் மதிமாறன், மகளிர் அணி மாநில இணைச் செயலாளர் குமரி விஜயகுமார்,

மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர்கள் ஜோயல், இன்பா ரகு, இளையராஜா, அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ் எம்.பி, பிரபு கஜேந்திரன், சீனிவாசன், ஜி.பி.ராஜா, ஆனந்த குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.என். அண்ணாதுரை, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் அக்ரி கணேசன், தர்மசெல்வன், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, பொன்னரசு, வி.பி.மணி, மருத்துவர் ஹபிசுல்லா, ஜாகீர் உசேன், பகுதிக் கழகச் செயலாளர்கள் ராமலிங்கம், மா.பா.அன்புதுரை, மதன்மோகன், வினோத் வேலாயுதம், ஜெபதாஸ் பாண்டியன், கோவி. லெனின், விஜயசங்கர், சாவல்பூண்டி சுந்தரேசன், சேலம் ராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் வழக்கறிஞர் பிரகாஷ், ராஜா அன்பழகன், வானவில் விஜய், ஆர்.டி. மதன்குமார், லோகேஷ், சுரேஷ்குமார், கிரண், கோல்டு பிரகாஷ், யுவராஜ், மாநகர அமைப்பாளர்கள் துர்கா பிரசாத் சுகுமார், சத்யபிரபு உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.11.2025) ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற "சென்னை e-sports குளோபல் சாம்பியன்ஷிப் போட்டியின் (CeGC – 2025) முதல் கட்ட போட்டியான கவுண்டர் ஸ்ட்ரைக்–2 போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, போட்டியின் நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

## தோழமைக் கட்சி தலைவர்கள் வைகோ, பெ.சண்முகம், தொல் திருமாவளவன் எம்.பி, கண்டன உரை!

# சென்னை கிழக்கு - வடக்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் SIR -ஐ கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு – ஆர்.டி.சேகர் அறிவிப்பு!

சென்னை.நவ.10-

தமிழ்நாட்டில் தொடங்கியுள்ள தீவிர வாக்காளர் பட்டியல் (SIR) சீராய்வை கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் நாளை 11.11.2025 செவ்வாய்க்கிழமை சென்னை கிழக்கு சென்னை வடக்கு மாவட்ட கழகங்களின் சார்பில் காலை 10.00 மணி அளவில் சென்னை தங்கசாலை, மணிக்கூண்டு, அரசு அச்சகம் அருகில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தலைவர் வைகோ, சி.பி.எம் மாநில செயலாளர் பெ. சண்முகம் விடுதலைசிறுத்தை கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி மற்றும் தோழமைக் கட்சி தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் உரையாற்றுகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், திமுக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. திமுக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி





எம்.பி. திமுக சட்டதிட்ட திருத்தக் குழு செயலாளர் இரா.கிரிராஜன், திமுக அமைப்பு துணைச் செயலாளர். ப. தாயகம் கவி.எம்.எல்.ஏ. திமுக பொறியாளர் அணி இணைச் செயலாளர் வெற்றி அழகன் எம்.எல்.ஏ, அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, திமுக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜெ. எபிநேசர், ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர், ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியை சார்ந்த கொளத்தூர் தொகுதி, வில்லிவாக்கம் தொகுதி மாவட்ட தலைவர் ஜெ. டில்லி பாபு, துறைமுகம் தொகுதி மாவட்டத் தலைவர் சிவ. ராஜசேகர், அம்பத்தூர் தொகுதி மாவட்ட பொறுப்பாளர் கே.வி.திலகர், எழும்பூர் தொகுதி, வில்லிவாக்கம் தொகுதி, மாவட்ட பொறுப்பாளர்கள் ஈ.புத்தநேசன், பி.சுரேஷ்பாபு, ஏ.அலி, ராயபுரம் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.திரவியம், சி.பி.எம் கட்சி சார்ந்த கொளத்தூர் தொகுதி, திரு.வி.க.நகர் தொகுதி, அம்பத்தூர் தொகுதி மாவட்ட செயலாளர் எம்.ராமகிருஷ்ணன் சுந்தர்ராஜன் துறைமுகம் தொகுதி எழும்பூர் தொகுதி வில்லிவாக்கம் தொகுதி மாவட்டச் செயலாளர் ஜி.செல்வா. சி.பி.ஐ கட்சி துறைமுகம் தொகுதி, எழும்பூர் தொகுதி, வில்லிவாக்கம் தொகுதி மாவட்ட செயலாளர் மு.வரதன், கொளத்தூர் தொகு தி திரு. வி.க.நகர் தொகுதி செயலாளர் த.கு. வெங்கடேஷ் வேம்புலி மதிமுக கட்சியை சார்ந்த துறைமுகம் தொகுதி, எழும்பூர் தொகுதி, வில்லிவா க்கம் தொகுதி, கொளத்தூர் தொகுதி, திரு. வி.க.நகர் தொகுதி, மாவட்டச் செயலாளர் திரு சு.ஜீவன், அம்பத்தூர் தொகுதி மாவட்ட செயலாளர் டி.சி. ராஜேந்திரன் விடுதலை சிறுத்தைகள் கட்சி, துறைமுகம் தொகுதி, எழும்பூர் தொகுதி மாவட்ட செயலாளர் திரு கோ.இளங்கோ, திரு.வி.க.நகர் தொகுதி மாவட்டச் செயலாளர் திருமதி க.உஷாராணி, கொளத்தூர் தொகுதி வில்லிவாக்கம் தொகுதி மாவட்டச் செயலாளர் திரு து.அப்பூன். அம்பத்தூர் தொகுதி மாவட்ட செயலாளர் திரு தேவ.ஞான முதல்வன், ஆர்.கே.நகர், ராயபுரம் மாவட்ட செயலாளர் சி.சௌந்தர். இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி சார்ந்த கே.ஏ.எம். அபூபக்கர் மு.எம். எல்ஏ. மாவ ட்டச் செயலாளர் கே.கோதர்ஷா, மனிதநேய மக்கள் கட்சி, துறைமுகம் தொகுதி எழும்பூர் தொகுதி வில்லி வாக்கம் தொகுதி மாவட்டச் செயலாளர் தாஹா எல். நவீன், கொளத்தூர் தொகுதி திரு. வி.க.நகர் தொகுதி மாவட்டச் செயலாளர் திரு கொளத்தூர் நசீர், அம்பத்தூர் தொகுதி மாவட்ட செயலாளர் அப்துல் காதர், மக்கள் நீதி மைய மாவட்ட செயலாளர் உதயகுமார், திராவிடர் கழகம் மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் தளபதி பாண்டியன், மாவட்டச் செயலாளர் அன்பு செல்வன், தமிழக வாழ்வுரிமை கட்சி மாவட்டச் செயலாளர் அ.அப்துல் சாதிக் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் ப.எட்வின் ராஜதுரை. மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் அரிமா அசாருதீன். விவசாய தொழிலாளர் கட்சி மாவட்ட செயலாளர் எம் குமரேசன், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி மாவட்ட செயலாளர் மாவட்ட செயலாளர் வி.ஆர். இசை பாலு மற்றும் தோழமைக் கட்சிகளின் பகுதி தலைவர்கள் பகுதி செயலாளர் கழக செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு ஆர்ப்பரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.



திருப்போரூர் வடக்கு ஒன்றியம், நெல்லிக்குப்பம் ஊராட்சியில் ஒன்றியச் செயலாளரும், ஒன்றிய குழுத் தலைவருமான எஸ்.ஆர்.எல்.இதயவர்மன் ஏற்பாட்டில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவர் என்.சி. பார்த்தசாரதி தலைமையில், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திருமதி.செல்வி சீனிவாசன், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் திருமதி.சித்ரா விஜயராகவன், திருமதி.மல்லிகா கன்னியப்பன், அ.தி.மு.க. கிளைச் செயலாளர்கள் விஜயராகவன், முரளிதரன், முருகேசன் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினர் அக்கட்சியில் இருந்து கூண்டோடு விலகி தி.மு.கழகத்தில் இணைந்தனர். உடன் வெண்பேடு ரமேஷ், என்.ஜி.கெஜராஜன், தையூர் ராமகிருஷ்ணன், கோமதி செந்தில்குமார், வெண்ணிலா நந்தகுமார், சாம்பசிவம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

---

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – இன்று திருவல்லிக்கேணியில் தொடங்கி வைக்கிறார்!

# 70 வயது பூர்த்தியடைந்த மூத்த தம்பதிகளுக்கு சிறப்பு செய்யும் திட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு

சென்னை,நவ.10-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (10.11.2025) சென்னை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் 70 வயது பூர்த்தியடைந்த மூத்த தம்பதிகளுக்கு திருக்கோயில்கள் சார்பில் சிறப்பு செய்யும் திட்டத்தை தொடங்கி வைத்து, திருக்கோயில் சார்பில் ரூ. 3.40 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளையும் திறந்து வைக்கிறார் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தாவது:

இந்து சமய அறநிலையத்துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில் களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

அந்த வகையில் 2025 26 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், "இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் மணி விழா கண்ட 70 வயது பூர்த்தியடைந்த ஆன்மிக ஈடுபாடு உள்ள 100 தம்பதியர்கள் வீதம் 20 இணை ஆணையர் மண்டலங்களில் 2,000 தம்பதியருக்கு திருக்கோயில்கள் சார்பில் சிறப்பு செய்யப்படும்." என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (10.11.2025) திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் சென்னை இணை ஆணையர் மண்டலங்களை சேர்ந்த 70 வயது பூர்த்தியடைந்த 200 மூத்த தம்பதிகளுக்கு சிறப்பு செய்து, திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார்.

தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தின் கீழ், 2,000 மூத்த தம்பதியினர் சிறப்பு செய்யப் படு கின்றனர். இத்தம்பதியினருக்கு ரூ. 2,500 மதிப்பிலான வேட்டி மற்றும் சட்டை, புடவை, இரவிக்கை, பழ வகைகள், மஞ்சள், குங்குமம், கண்ணாடி வளையல் உள்ளிட்ட மங்கலப் பொருட்கள் மற்றும் சுவாமி படம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

அதனைத் தொடர்ந்து துணை முதலமைச்சர் அவர்கள், பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் சார்பில் திருவல்லிக்கேணி, நல்லதம்பி தெருவில் ரூ. 2.05 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள துணை ஆணையர்/செயல் அலுவலர் மற்றும் கண்காணிப்பாளர் குடியிருப்பு களையும், பார்த்தசாரதி தெருவில் ரூ. 1.35 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பணியாளர் குடியிருப்பினையும் திறந்து வைக்கின்றார்.

இந்நிகழ்ச்சிகளில் ஆதீனப் பெருமக்கள், பெருநகர மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.வின் சார்பாக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சித் தலைவர்கள் கூட்டம் திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் SIR கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து நவம்பர் 11ஆம் தேதி அன்று நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தொடர்பான ஆயத்த கூட்டம் மாவட்டக் கழக செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரம், நாழிக்கல்பட்டி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (08.11.2025) நடைபெற்று வரும் "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் இணை இயக்குநர் நலப்பணிகள் மரு.நந்தினி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.யோகானந்த் (ஆத்தூர்), மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி ஆகியோர் உள்ளனர்.